Tiaano™
Innovation in Inert Metals
Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2000 Company
Ti Nb Ir Ta Ru Pt
#48 Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 2278 1148 Fax: 2278 1362 Email: info@tianode.com Web: www.tianode.com

# INTER - ORGANIZATIONAL NEWSLETTER – OCT 2008

## FORECASTING 08-09

| | |
|---|---|
| Turnover | : 165% ↑ |
| Infrastructure | : Automation |
| Profitability | : 100% ↑ |
| Rejection Rate | : 100% ↓ |

## TESTIMONIALS

**Customers:**

| | |
|---|---|
| Up to **Aug** 08 | : 299Nos |
| Up to **Sep** 08 | : 305Nos |

**Performance: Aug 2008**

| | |
|---|---|
| Turnover growth | : 8.76 % |
| Employment growth | : 0.0% |
| 100% Attendance | : 18.6% |

## MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | : Director |
| Mrs. J. Vanajambika | : Director |

## KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jeyakumar | : CEO. |
| Mr. RS. Thangappan | : GM. |
| Mr. T. Amaladhas | : Plating. |
| Mr. T. Ramesh | : Production. |
| Mr. N. Murugan | : Planning. |
| Mr. M. Suyambu | : Stores . |
| Mr. RM. Ravichandran | : Marketing. |
| Mr. C. Babu | : Finance. |
| Mr. R.Ramesh | : QA. |
| Mr.C. Sounder suresh | : Purchase |
| Mr.C. Kalidasan | : Outsourcing |

## ACHIEVEMENT




## உயர்த்தும் உறவுகள்

எந்த ஒரு நிறுவனத்திலும் தொழில் நுட்பச் சிக்கல்களைக் கையாள்வதை விட முக்கியம் மனித உறவுகளைக் கையாள்வது என்றார் லீ இயகோகா. பணிபுரியும் இடங்களில் மனித உறவுகள் என்பது இருவகை. பணியிடத்தில் உள்ள சக பணியாளர்களுடனான உறவு, வாடிக்கையாளர்களுடனான உறவு.

இதில் சக பணியாளர்களுடனான உறவு சிதைந்தாலும் சீர் செய்து கொள்ளலாம். வாடிக்கையாளர்களுடனான உறவு சிதைந்தால் அவரை இழக்க வேண்டியதுதான். அதனால்தான் பொறியாளரான லீ இயகோகா தொழில் நுட்பச் சிக்கல்களைக் காட்டிலும் மனித உறவுகள் இடையிலான சிக்கல் தான் சீர் செய்யப்பட வேண்டியது என்று சொன்னார்.

வாடிக்கையாளர்களுடன் அன்றாட நடவடிக்கைகளில் கருத்து வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். சில நேரங்களில் தவறு வாடிக்கையாளரின் பக்கம் இருக்கும். சில நேரங்களில் தவறு நம் பக்கம் இருக்கும்.

பொதுவாக, வாடிக்கையாளர் மீது தவறு இருக்கலாம். ஆனால், வாடிக்கையாளர் மன நிறைவே முக்கியம் என்ற எண்ணம் ஏற்படுமானால் விட்டுக் கொடுப்பதே நல்லது என்கிற அணுகுமுறையைத்தான் பல பன்னாட்டு நிறுவனங்களும் கொண்டுள்ளன.

தன் குறையைச் சொல்வதற்காக நேரிலோ தொலை பேசியிலோ வாடிக்கையாளர் பேசும் போது அவருடன் வாதிட்டு தங்கள் பக்கத்து நியாயத்தை நிலைநாட்ட பெரும்பாலான நிறுவனங்கள் முயல்கின்றன. அது தவறான அணுகுமுறை. சிக்கலும் சர்ச்சையும் இல்லாமல் வாடிக்கையாளர்களைக் கையாள்வது எப்படி என்று ஆராய்ச்சி செய்த நிபுணர்கள், "3 நிமிடத் திட்டம்" ஒன்றை வகுத்தார்கள்.

ஒரு புகாரைச் சொல்வதற்காக வாடிக்கையாளர் உங்கள் நிறுவனத்திற்குள் நுழைந்ததும் முதல் மூன்று நிமிடங்கள் முக்கியமானவை. முதல் நிமிடமே அவருக்கு இதமான வரவேற்பு தரப்பட்டு, முகமன் கூறி அமர வைக்கப்படுவாரானால் அவருக்குள் ஓர் இணக்கமான உணர்வு ஏற்படத் தொடங்கும்.

இரண்டாவது நிமிடத்தில் அவரது கண்கள் உங்கள் அலுவலகத்தை அளக்கின்றன. நேர்த்தியாக அடுக்கப் பட்டுள்ள கோப்புகள், அமைதியாகப் பணிபுரியும் அலுவலர்கள், கண்கவரும் உள்ளலங்காரம், அவையெல்லாம் உங்கள் அலுவலகம் குறித்த உயர்ந்த ஓர் எண்ணத்தை அவருக்குள் ஏற்படுத்துகிறது. மூன்றாவது நிமிடமே, உங்களிடம் மென்மையாகப் பேசி, தன் தேவையைத் தெரிவிப்பது என்கிற முடிவுக்கு அவர் வந்து விடுகிறார். தன் புகாரை ஒரு கோரிக்கை போலத் தெரிவிக்கிறார்.

அதீத அக்கறையுடன் நீங்கள் செவிமடுத்து, அவருக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு வருந்தி. உடனே சரிசெய்து தருவதாகச் சொல்லிப் பாருங்கள். "பரவாயில்லை! இன்னும் இரண்டு நாட்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு சிரித்த முகத்துடன் வெளியேறுவார்.

## சிரிப்பு பல ரகம்

சிரிப்பில் பலவகை உண்டு. யார் யார் எப்படி சிரிப்பார்கள் தெரியுமா?

கண் பார்த்து சிரிப்பவன் – காரியவாதி.

காணாமல் சிரிப்பவன் – கஞ்சன்.

கற்பனையில் சிரிப்பவன் – கவிஞன்.

இடம் பார்த்து சிரிப்பவன் – எத்தன்.

இடமெல்லாம் சிரிப்பவன் – கோமாளி.

வெகுளியாக சிரிப்பவன் – ஏமாளி.

வேண்டாது சிரிப்பவன் – வஞ்சகன்.

கோபத்தில் சிரிப்பவன் – கொடுமைக்காரன்.

அமைதியாக சிரிப்பவன் – சிந்தனையாளன்.

துன்பத்திலும் சிரிப்பவன் – மனிதன்.

தொகுத்தளித்தவர்
கோ.பத்மபிரியா – HRD

## ஹைக்கூ கவிதைகள்

நீ என்னை தொட்டதுமே
நான் மெய்சிலிர்க்கிறேன்
என்கிறது தொட்டால் சுருங்கி

கருவரைக்கும் கல்லரைக்கும்
உள்ள இடைவெளி
வாழ்க்கை!

என் உயிரை இழந்தாலும்
எனக்காக இரு வினாடிகள் துடிப்பது
என் இதயம்...

### வாழ்க்கை

வாழ்க்கை ஒரு புத்தகம்
நாட்கள் அதன் பக்கங்கள்
மணித்துளிகள் அதன் சொற்கள்
நல்லவற்றை ஏற்றுக் கொள்
புரியாதவற்றை தேடு
வாழ்வின் அர்த்தம் கிடைக்கும்
வாழ்க்கை ஒளிமயமாகும்

அளித்தவர்
F.Arul Renis – Q.C Asst

புணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– **Editor**

மாறாக, உள்ளே நுழைந்த அவருக்கு, யாரும் எந்த வரவேற்பையும் தராமல், நெடுநேரம் காத்திருக்கச் செய்து, அவர் தன் புகாரைச் சொன்னதும் நிறுவனத்தின் மேல் தவறில்லை என்ற தொனியில் பதில் பேசத் தொடங்கினால், உடனே சண்டை வலுக்கிறது. உங்களுக்கு ஆதாயம் தரக்கூடிய ஒரு நல்ல வாடிக்கையாளரை மனித உறவுகளை நிர்வகிக்கத் தெரியாத காரணத்தால் இழக்கிறீர்கள்.

– உலகப் புகழ்பெற்ற நிர்வாக உத்திகள் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## குறி தப்பக்கூடாது!

ஒரு முறை விவேகானந்தர் அமெரிக்கா போய் இருந்தார். அவர் ஆற்றோரமாய் நடந்து சென்றுகொண்டு இருந்தபோது, ஆற்றில் மிதந்துவந்த முட்டை ஓடுகளை சில இளைஞர்கள் துப்பாக்கியால் சுடுவதைக் கண்டார்.. இளைஞர்களின் குறி சரியில்லை. குண்டுகள் திசைமாறிப் போயின.

அதை கண்ட விவேகானந்தர், துப்பாக்கியை வாங்கினார், சுட்டார். முட்டை ஓடுகள் தூள் தூளாயின.

இளைஞர்களுக்கு ஆச்சர்யம். அவரிடம் கை குலுக்கினார்கள்.

"ஐயா, நீங்கள் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றவரா?" என்று கேட்டனர்.

"இப்பொழுதுதான் முதன் முதலாய் துப்பாக்கியைக் கையில் பிடித்தேன்" என்றார், விவேகானந்தர்.

"அப்படியானால் எப்படி குறி தவறாமல் சுட்டீர்கள்?"

விவேகானந்தர் புன்னகைத்தபடி பதில் சொன்னார் "மனம் ஒன்றை நினைக்கும் அப்போது, மற்ற எதையும் நினைக்கக்கூடாது. என் மனமோ முட்டை ஓடுகளின் மீது மட்டுமே இருந்ததால் குறி தப்பாமல் சுட முடிந்தது."

தொகுத்தளித்தவர்
கோ.பத்மபிரியா – HRD

## சாதனை படைத்தோரின் வாழ்க்கை குறிப்புகள்



**பெயர்** : பிரான்க் ஓயிட்டல்
**இடம்** : கார்ன்வெல், இங்கிலாந்து
**பிறப்பு** : ஜூன் 1, 1907
**இறப்பு** : ஆகஸ்டு 9, 1996

சர். பிரான்க் ஓயிட்டல் தனது வாழ்நாள் இலட்சியமாக Air Jet Engine – ஐ கண்டுபிடித்து சாதனையாளராக விளங்கியுள்ளார். இவர் தனது 15–வது வயதிலே விமானம் ஓட்டுநர் ஆகும் எண்ணத்தில் RAF (Royal Air Force) என்னும் நிறுவனத்தில் சேர்ந்தார். 1930–ஆம் ஆண்டு தனது பட்டப்படிப்பை Combridge பல்கலைக்கழகத்தில் முடித்தார். பின்னர் RAF - ல் தனது பணியையும் தொடங்கினார். அவர் 1937 – யில் தொடங்கி 1944 – ல் தனது Air Jet Engine கண்டுபிடிக்கும் பணியை நிறைவு செய்தார். பின்னர் 1948 – ல் RAF - ல் இருந்து ஓய்வு பெற்றார். Technical Advisor ஆக BOAC (British Overseas Airways Corporation) மற்றும் NAVIR (United States Noval Acadamy) – ல் 1977 – 1979 விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

தொகுத்தளித்தவர்
ஜி.கல்யாண்குமார்.– System Admin.

## Health Tips

- To increase absorption of vitamins and minerals, avoid coffee and other high caffeine drinks for 1.0 to 1.5 hours of taking a supplement.
- Calcium is best absorbed in an acidic environment – look for a calcium supplement that contains betaine hydrochloride or hydrochloric acid.
- Regular use of ginseng has been shown to boost the level of white blood cells – a sign of increased immune system functioning.
- Garlic can help reduce blood pressure and cholesterol – use it daily.
- Herbal extracts generally contain very tiny amounts of vitamins and minerals and do not take the place of a vitamin and mineral supplement – use both for optimal health.

### Take Action Today

- Realize that your diet alone cannot provide your body with optimal levels of all vitamins.
- Begin taking a multi-vitamin and mineral supplement daily – base your buying decision on our tips.
- Remember vitamins and minerals work together
- Take your vitamin and mineral supplement with food containing protein to maximize absorption.
- Along with your multi-vitamin and mineral supplement, take additional calcium and organically bound selenium.

The above matters has taken from
Fighting Body Pollution magazine

## கான்பிடன்ஸ் கார்னர்

அது ஒரு மழை மாதம். நள்ளிரவு நேரம் அமெரிக்காவின் ஃபிலெடெல்ஃபியாவில் இருந்த அந்தச் சிறிய தங்கும் விடுதிக்குள் நடுங்கி நுழைந்தார்கள் அந்த முதிர்ந்த தம்பதிகள். வரவேற்பில் இருந்த இளைஞன். எல்லா அறைகளும் நிரம்பிவிட்டன. ஆனாலும், இப்போது உங்கள் இருவரையும் எப்படி வெளியே அனுப்புவது? நீங்கள் விரும்பினால், என்னுடைய ஓய்வறையில் தங்கிக் கொள்ளலாம்.. அவர்களும் இசைந்து தங்கினார்கள். இரண்டு ஆண்டுகள் சென்றன. அந்த இளைஞனுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த வாரம் நியூயார்க் வருமாறு விமான டிக்கெட் வைக்கப்பட்டிருந்தது. விமான நிலையத்தில் அந்த தம்பதிகள் அந்த இளைஞனை அழைத்துச் சென்று இது நாங்கள் புதிதாகக் கட்டியுள்ள தங்கும் விடுதி. இதை நீதான் நிர்வகிக்கப் போகிறாய் என்றார்கள். ஆச்சரியத்தில் உறைந்து போனான் அந்த இளைஞன். மனிதாபிமானத்துக்குக் கிடைத்த மகத்தான பரிசு!

அந்தத் தங்கும் விடுதி, பின்னாளில் உலகப் புகழ்பெற்ற வால்டார்ஃப் அஸ்டோரியா ஹோட்டல். அந்த இளைஞன் ஜார்ஜ்.சி.பால்ட். சிரத்தையோடு செயல்படுங்கள். சிகரத்தை எட்டலாம்.

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## இதயவால்வு பாதிப்பு அறுவைசிகிச்சைதான் தீர்வா?

இயல்பாக மூடி திறக்கும் நான்கு இதய வால்வுகள்:

இதயத்தில் நான்கு இதய வால்வுகள் உள்ளன. இதய வால்வுகள் இயல்பாக மூடி மூடித் திறந்து கொண்டே இருப்பவை. இதனால் இதய அறைகளுக்குள் ரத்தம் எளிதாகச் சென்று வரும். 10 வயது முதல் 15 வயதுக் குழந்தைகளைப் பொருத்தவரை ருமாட்டிக் காய்ச்சல் காரணமாக இதய வால்வுகள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். கண் வலி வந்தால் இமைகள் ஒட்டிக் கொள்வது போன்று ருமாட்டிக் காய்ச்சல் காரணமாக இதய வால்வுகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு பழுதாகி விடுகின்றன.

தொண்டையில் தொடங்கி இதயத்தைக் குறி வைக்கும் பாக்டீரியா:

காற்றோட்டம் இல்லாத வீடு, நல்ல குடிநீர் கிடைக்காத தன்மை, சுகாதாரமற்ற சூழலில் வசிக்கும் 10 வயது முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகள் மீது 'பீட்டா ஹீமோலிட்டிக் ஸ்ட்ரெப்டோகாக்கஸ்' என்ற பாக்டீரியா தாக்குதல் தொடுக்க ஆரம்பிக்கும். அந்த பாக்டீரியா முதலில் தொண்டையில் புகுந்து வேலையை ஆரம்பிக்கும். தொடக்கத்தில் வறட்டு இருமலும் லேசான காய்ச்சலும் இருக்கும்.

அடுத்த கட்டமாக காய்ச்சலுடன் இடம் விட்டு இடம் குழந்தைக்கு மூட்டுகள் வலித்து, காய்ச்சல் இருந்தாலே இதய வால்வுகளில் தனது வேலையைக் கிருமி தொடங்கிவிட்டது என்று கொள்ள வேண்டும். மூட்டுகளும் இதய வால்வுகளும் கிருமியைப் பொருத்தவரை ஒரே மாதிரியான அமைப்புகளாக இருப்பதால், இரண்டு இடங்களிலும் தாக்குதல் தொடுக்கிறது. இந்நிலையில் இதயத்தைக் காக்க குழந்தைக்கு உடனடி சிகிச்சை அவசியம். இவ்வாறு மூட்டு வலியுடன் காய்ச்சல் வந்தாலே 'ருமாட்டிக் ஃபீவர்' (Rheumatic Fever) என்று பெயர்.

## FUNCTIONAL WISHES



**CHILDREN'S DAY**
**NOVEMBER 14**

**Best Wishes From Tiaano Employees.**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. Vincent |
| Central Excise | : Mr. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |

## BIRTH DAY WISHES



| | |
|---|---|
| **Mr. R.P.Parthasarathy**<br>S/o. T.Raveendran - Logistics Dept | Nov 06 |
| **Master.N.Vsnabegam**<br>D/o. A.Nazirkhan - Driver | Nov 09 |
| **Mr. A. Mohan**<br>Marketing-dept | Nov 10 |
| **Mrs. M. Malathi**<br>W/o. K. Murugan-pro | Nov 12 |
| **Mr .V. Balamurugan**<br>Production-dept | Nov 12 |
| **Master.S.Abishek**<br>S/o .G.Manivannan-Coating | Nov 14 |
| **Mr. B. Madhavan**<br>Production-dept | Nov 14 |
| **Mrs.M. Kanagavalli**<br>Marketing -dept | Nov 14 |
| **Mrs.M. Loganayagi**<br>Coating -dept | Nov 21 |
| **Baby T.R. Varshika**<br>D/o. T. Ramesh-Production- mgr | Nov 21 |
| **Master. M.Dinesh**<br>Mrs. M. Kanagavalli- Marketing | Nov 23 |
| **Mr. D. Kingston**<br>Liaison-dept | Nov 30 |

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!**

**Best Wishes by Tiaano Employees.**

இத்தகைய காய்ச்சல் இதய வால்வைப் பாதிப்பதால், Rheumatic Fever licks the joints and bites the Heart என்ற மருத்துவ மொழியும் உண்டு.
இதய வால்வு பாதிப்பு, அறிகுறிகள் என்ன?

ருமாட்டிக் காய்ச்சல் (மூட்டு வலியுடன் இணைந்த காய்ச்சல்) காரணமாக குழந்தை சோர்ந்து படுத்துக் கொள்ளும். இதயத் துடிப்பு அதிகமாக இருக்கும். வறட்டு இருமல் வந்த உடனேயே மருத்துவரிடம் காண்பிப்பதன் மூலம் இதய வால்வு பாதிப்பைத் தடுத்து விடலாம். வறட்டு இருமல் மூட்டு வலியாக மாறும் நிலையில், இதய சிகிச்சை நிபுணரிடம் குழந்தையைக் காண்பிப்பது அவசியம். 'எக்கோ கார்டியோகிராம்' பரிசோதனை மூலம் இதய வால்வுகளின் செயல்பாட்டைத் துல்லியமாகக் கணித்து இதயத்தில் அழற்சி மட்டும் ஏற்பட்டுள்ள நிலையில் மருத்துவ சிகிச்சையே போதுமானது.

மருத்துவர் சொல்லும் வரை மாத்திரை சாப்பிடுவதை நிறுத்தக்கூடாது. மூட்டு வலி நின்றவுடன் மாத்திரை சாப்பிடுவதை நிறுத்திவிடக் கூடாது. மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட பிறகு, மீண்டும் பரிசோதனை செய்து இதயவால்வு பாதிப்பு இல்லை என உறுதியான பிறகே மாத்திரை சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.

ருமாட்டிக் காய்ச்சல் காரணமாக குழந்தையின் இதயவால்வு பாதிக்கப்படும் நிலையில், வால்வின் பாதிப்பைப் பொருத்து அறுவைச் சிகிச்சை தீர்மானிக்கப்படும். இதய 'மைட்ரல்' வால்வின் சராசரி பரப்பளவு **2.5** சதுர சென்டி மீட்டர் முதல் **3.5** சதுர சென்டிமீட்டர் வரை. அதன் பரப்பளவு **1.5** சதுர செ.மீ. அளவுக்குக் குறைந்துவிட்டால் மாத்திரைகள் மூலம் பலன் கிடைக்காது. இந்த அளவுக்கு வால்வு சுருங்கி விட்டாலே குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்படும்.

மேலும் இதய வால்வின் பிரச்சினையை மூன்று வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். 1. வால்வு அதிகமாகச் சுருங்கி விடுதல். 2. வால்வு சரியாக மூடித் திறக்காமல் நுரையீரலுக்கே ரத்தம் திரும்பி விடுதல் 3. முதல் இரண்டு கோளாறுகள் சேர்ந்து இருத்தல் என இதய வால்வுகள் பிரச்சினையை வகைப்படுத்தலாம்.

பிரச்சினைக்கு ஏற்ப அறுவைச் சிகிச்சை மூலம் பழுதான வால்வைச் சரி செய்யலாம். அல்லது செயற்கை வால்வைப் பொருத்தி இதயத்தைக் காக்க முடியும்.

மருத்துவ மலரிலிருந்து தொகுக்கப்பட்டது.

## J V Oil &Gas Project

